அதிகமான அளவுக்கு தொகைகளைப் பெற்றவர் கல்வி அமைச்சர். (சிரிப்பு)

## 6. அறிவிப்புகள்.

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன்வடிவு 1994, (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/94) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)— தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன்வடிவு 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு ஆய்வு செய்தல். 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1994). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/94) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

## 8. எஞ்சிய கூட்ட நாட்களுக்கும் பேரவைப் பணிகளின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளி வைக்கப் பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை—பேரவைத் தலைவரின் தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அப்பு நடேசன்

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் ராஜீவ் காந்தி உலகம் போற்றும் உத்தமர் ; நீண்டநாள் அவர் கண்ட கனவாகிய பஞ்சாயத்துராஜ் பில் இன்று இருக்கின்றது. இந்த பஞ்சாயத்து பில் பாஸ் ஆக வேண்டும். அந்தச்

---

@18—4—1994-ஆம் தேதியிட்ட அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளி வைக்கப் பட்டிருப்பதை மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை—பேரவைத் தலைவரின் தீர்ப்பு

[திரு. இரா. அப்புநடேசன்] [1994 ஏப்ரல் 19

சமயத்திலே முக்கிய எதிர்க்கட்சியாகிய எங்களுடைய காங்கிரஸ் கட்சி நண்பர்கள் எல்லாம் உள்ளே வருவதற்கு திரு. பீட்டர் அல்போன்ஸ் ஒருவர் வரவில்லை. அவருக்கு கொடுத்த அந்த ஃபைனை மன்னித்து, திருப்பி அவர் உள்ளே வர அனுமதிக்க வேண்டும்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்பு நடேசன். நீங்கள் இதுபற்றி வேறு ஏதோ கருத்து சொல்ல வருகிறீர்கள் என்று நினைத்தேன். இதைப்பற்றி நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கேட்டார். நேற்றைய தினமே நான் பதில் சொல்லி இருக்கிறேன். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இந்த அவையிலே கலந்து கொண்டு, அவை நடவடிக்கைகளில் பங்குபெறுவதற்கு எத்தகைய தடையும் இல்லை. நான் தடை விதித்தது என்பது ஒரே ஒரு உறுப்பினருக்குத்தான், அவர் முறைகேடாக நடந்து கொண்டார் என்பதற்காக. எனவே முறைகேடாக நடந்து கொண்டவருக்காக நாங்கள் அத்தனை பேரும் வர மாட்டோம் என்று சொல்வது நியாயம் அல்ல என்று நேற்றிலிருந்து நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

இன்றையதினம், காலையிலேகூட எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. டேனியல்ராஜ், திரு. ரங்கநாதன், கொறடா திரு. சுந்தரதாஸ் போன்றவர்கள் என்னைச் சந்தித்துக் கேட்டார்கள். அவர்களிடத்திலேயும் சொன்னேன். மற்ற உறுப்பினர்கள் எல்லாம் வந்து கலந்து கொள்ளுங்கள் என்றே கேட்டேன். எனவே, அவர்கள் வந்து கலந்து கொள்வதில் எத்தகைய தடையும் இல்லை. அதிலும் குறிப்பாக இந்தச் சட்ட முன்வடிவு இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறபோது, இது ராஜீவ் காந்தி அவர்களே, கனவுகண்டு வரவேண்டும் என விரும்பியது என்று நீங்களே சொன்னீர்கள். அந்த உணர்வு எல்லா உறுப்பினர்களுக்கும் இருந்து, அவர்கள் வந்து கலந்து கொள்ளவேண்டும். எனவே, ஒரு உறுப்பினருக்காக இவ்வளவு பெரிய சட்ட முன்வடிவின் மீது நடைபெற உள்ள விவாதத்தில் கலந்து கொள்ளமாட்டோம் என்று முடிவு எடுக்கிறபோது, அவர்களுடைய முடிவுக்கு நான் குறுக்கே போய் நிற்க முடியாது (குறுக்கீடு) விவாதம் தொடங்கட்டும். நான் நேற்றையதினமே சொல்லியிருக்கிறேன். ஒரு உறுப்பினர் முறைகேடாக நடந்து கொண்டிருக்கிறபோது, அந்த உறுப்பினருக்காக, இந்தப் பேரவையினுடைய ஒட்டுமொத்த நடவடிக்கைகள், வேறு திசை நோக்கிச் செல்வதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) இதிலே வேண்டாம். இன்றைக்கு நீங்கள் பேசப் போகிறீர்கள். (குறுக்கீடு) திரு. கே. செல்வராஜ்.